1589

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, வைகாசி ௧௩ 27—5—55 தளிர்-34

## வேண்டற் பாலது.

"நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே"

'கந்தாலங்காரம்'

மக்கள் இறைவனிடத்தில் உறுதி கொண்டு, இயற்கைச் செந்நெறி நின்று, வாழ்வு நடாத்தி வருங்கால், தொடக்கத்தில் முன்னை ஊழ்வினையினாலோ, வேறு சில குறைபாடுகளாலோ வழுக்கி வீழினும் வீழ்வர். வீழ்தல் இயல்பு. வீழ்ந்துபடுபவர் யாது செயல்வேண்டும்? அவ்வீழ்ச்சி குறித்து உளம் நெகிழ்ந்து வருந்துதல் வேண்டும்; ஆண்டவனை நோக்கி முறையிடுதல் வேண்டும். வருந்தாமலும், முறையிடாமலும் வழுக்கி வீழ்ந்து வீழ்ந்து செல்லும் மக்கள் இயற்கையாம் இறை வாழ்வினின்றும் விலகி விடுகின்றனர். தவறி வீழும் மக்கள் முதலில் அத் தவறுதல் குறித்து உளம் நொந்து வருந்துவதோடு அவ்வருத்தம் மீண்டும் தவறுதல் உறாத முறையில் இறைவனின் துணையைக் குறிக்கொண்டு நிகழ்வதாயிருத்தல் வேண்டும். உண்மையாகக் கசிந்து கசிந்துருகும் உள்ளத்தில் திருவருள் பதிதல் உறுதி.

ஆண்டவன் எற்றுக்கிருக்கின்றான்?. மக்கள் வழுக்கி வீழ்ந்து அலமந்து வருந்துப்போது துணையுரியவே ஆண்டவன் இருக்கிறான். ஊழின்மீது பழி சுமத்துவோர் இறைவனிடத்து உறுதியில்லாதார் என்க. ஆண்டவனருளால் எல்லா வினைகளையும் வெல்லலாம். வேண்டற்பாலது ஆண்டவனிடத்து உறுதி. உறுதி.

"புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந் திட்டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென் றருள் செய்வான்"

'மூர்த்தி'

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| கிளை | மன்மத, வைகாசி, | தளிர் |
|---|---|---|
| 7 | 27-5-55 வெள்ளி. | 34 |


# கண்ணோட்டம் வேண்டும்.

மனிதன் குறையுடையவன். குறைவற்ற முழுமனிதனை யாண்டும் காண்டலியலாது. எல்லாம் வல்ல இறைவனே குறையில்லா முழுப்பொருளாவான். அங்ஙனமிருக்க ஒருவர் குறையை ஒருவர் எடுத்துப் பெரிதாக்கிக் காட்டி அக்குறைக்காக அவரை இழித்தும் பழித்தும் பேசுதல் எங்ஙனம் பொருந்தும்? குறையை எடுத்துக் காட்டுதல் அதை நீக்குதற் பொருட்டாதல் வேண்டும். இல்லையேல் அதனால் பயன் என்ன? ஏசலும் தூற்றலும் குறையுடையவன் அக்குறையை உணர்வதற்குத் தடைகளாகி விடும். நயம் பட உரைத்து நலம் காணுதற்கு நம்மவர் முயலல் வேண்டும். இதுவே உலகப் பெரியார்கள் என்று போற்றப்படும் சான்றோர் மேற்கொண்டொழுகிய நெறியாகும். இவ்வுண்மையைத் தமிழராயினர் உணராது பல தொல்லைகளை ஏற்படுத்திக் கொண்டு தம்முள் பகைகொண்டு உழல்கின்றனரே!

அக்காலத்தில் நந்தம் தமிழ்ப் புலவராயினர் குறைகண்டவிடத்து எடுத்துக் காட்டியும் அது களைவதற்குரிய வழிவகைகளை வகுத்துக் காட்டியும் தமிழ் மக்களைக் குறைகளின் தீய விளைவுகளிலிருந்தும் காப்பாற்றி வந்தனர். மன்னரிடமும் குறைகளைக் கண்டு திருத்திய கவியரசர்கள் பலரை நம் தமிழ்த்தாய் ஈன்றின்புற்றிருக்கின்றாள். கோவூர்கிழார், வெள்ளைக் குடி நாகனார் போன்றோர் இவ்வகையில் தலைசிறந்தோங்கியவர் என்பதைப் புறநானூறு பறைசாற்றி அறிவிக்கின்றதே! அவரெல்லாம் தூற்றுவதையா தொழிலாகக் கொண்டனர்? கொடிய சொற்களையா பயன்படுத்தினர்? இல்லையே. செஞ்சொற்களை யன்றோ பயன்படுத்தி நலங் கொழித்தனர். கண்டனத்தின் வயப்படாது கண்ணோட்டமுள்ள சீர்திருத்தச் செம்மல்களாக வன்றோ திகழ்ந்தனர்? அங்ஙனமிருக்கத் தமிழிலக்கியங்களின் நலம் நுகர்ந்தோரும் இன்று கண்ணோட்டமின்றிக் கண்டனத்திலேயே மூழ்கியிருத்தல் எற்றுக்கோ?

சமயச் சண்டைகளும் சாதிப் பூசல்களும் இடைக்காலத்தில் இவ்வாறு கண்ணோட்டமின்றிப் பேசி, எழுதி வந்ததால் ஏற்பட்டன. அதன் விளைவுகளை உன்னுங்கால் நமக்குப் பேரச்சம் தோன்றுகின்றது. அப் பூசல்களும் சண்டைகளும் நாட்டின் அமைதியைக் கெடுத்ததே யன்றி நாட்டின் பரப்பையும் மக்களின் தொகையையும் பெரிதளவுக்குக் குறைத்துப் பிறநாட்டுச் சமயங்களும், மொழியும், ஆட்சியும் வேரூன்றக் காரணமாயின. இன்றும் அத்தகைய பூசல்களுக்கு நாம் இடமளிப்போமாயின் நம் தமிழகம் என்னும்! என்பதைச் சற்றே நினைந்து பாருங்கள்.

இன்று கட்சி உருவில் அப் பூசல் தலைகாட்டத் தொடங்கி வளர்ந்து வருகின்றது. சொல்லாலும் எழுத்தாலும் பிறரைக் கண்ணோட்டமின்றிக் கண்டித்தலே கட்சிகளின் செயலாகிக் காண்கின்றது கொள்கை வேறுபாடுகள் தமிழர் என்னும் ஒருமை மனப்பான்மை ஏற்படுவதற்கு ஊறாக அமையும்படிக் கட்சிகள் இயங்கிவருகின்றன. தமிழராயினர் "மொழி" "கலை" "தொழில்" "அருள்" "பணி" என்னும் யாவர்க்கும் பொதுவாய துறைகளிலாவது ஒருமை உணர்ச்சி யுடையவராதல் வேண்டும் என்பது நாம் பற்றிப் படர்ந்து வரும் கொள்கைகளாகும் இக்கருத்துக்கு ஊன்றுகோலாகக் கட்சிகள் பணிசெய்தல் வேண்டும் என்பது நாம் விடுக்கும் வேண்டுகோளாகும்.

கருத்து வேற்றுமைக்காகத் தமிழர் தம்முள் பகை விளைவித்துக் கொள்ளுதல் தவறு, தவறு, பெருந்தவறு. "கருத்துவேற்றுமைக்கு மதிப்புக் கொடாமை என்பது இந்தியரிடையே காணும் ஐம்பெருங் குற்றங்களுள் ஒன்று" என்று தமிழ்ப் பெரியார் அவர்கள் இசைத்

தை நாம் நினைவுகூறக் கடமைப்பட்டவர்களாவோம்.

திரு. வி. க அவர்கள் இறக்குமுன் ஒரு மாநாட்டில் பேசியபோது குறிப்பிட்ட சிலகருத்துக்களையும் வெளியிடுதல் தக்கதென்று எண்ணுகின்றோம்.

"மொழி நாடு என்னும் இவைகளின் முன்னேற்றத்திற்காகப் பொதுச் செயல்கள் நடைபெற வேண்டும். எல்லாக் கட்சியாளர்களும் பொது மேடைகளில் கூடிப் பொது மக்களிடம் அக்கொள்கைகளை நன்கு விளக்குதல் வேண்டும்"

"தமிழரின் ஒருமைப் பாட்டுக்குப் பொது மேடைகளே வேண்டும்; வேண்டும்; மிகவும் வேண்டும்"

காய்தலும் உவத்தலுமின்றி நடுவுநிலையில் நின்று ஆய்ந்து கருத்துக்களை வெளியிடுதலே இன்று நாட்டிற்கு ஆக்கந்தரும் செயலாகும். வெறுப்போடு கருத்துக்களை ஆராய்வோனுக்கு அக்கருத்துக்களினடியில் இருக்கும் நல்லவை வெளிப்படா. விருப்போடு காண்போனுக்கு அவைகளிலுள்ள தீயவை புலப்படா. இது நாலடியார் காட்டும் செந்நெறி. அந் நன்னெறி நம் நெறியாதல் வேண்டும். தமிழர் நெறியாதல்வேண்டும், அன்றே தமிழர் விடுபடும். தமிழ்த்தாய் செங்கோலோச்சும் நன்னாளும் அதுவேயாகும். அரிய செயல்தான்; எனினும் இன்று நம் இழிவைத் துடைத்தற்கும், உயர்வை ஊட்டுதற்கும் உரிய செயலாகும் அது. முயல்வோம்; தளாது முயல்வோம். முயற்சி திருவினையாக்குமன்றே! . .

தமிழர் ஒன்றுபடுதற்குக் கருத்துக்களை எடுத்துச் சொல்

## ஆண்டு

"இப் பண்டம் ஆண்டு வரும், இது ஆண்டு வராது" என்பவை வீட்டு வழக்காம். இப் பண்டம் தொடர்ந்து பயன்பட்டு வாரது, நீடித்த பயனைத் தந்துத வாது என்பதையே தாய்மார் அப்படி வழங்குவர்.

"ஆண்டு என்பது ஆளப்பட வேண்டும் என்பதையே சுட்டி நிற்கிறது. [ஆள் என்பதனடியினின்று பிறந்ததாகும்] எது ஆளப்படவேண்டும்? நாள் ஆளப்படவேண்டும்- முந்நூற்றறுபது நாட்களில் ஒவ்வொரு நாளும் ஆளப்படவேண்டும். எப்படி ஆளப்படவேண்டும்? வீணாகாத வண்ணம் ஆளப்படவேண்டும்-பயன் விளையும் வண்ணம் ஆளப்படவேண்டும்– சிறப்படையும் வண்ணம் ஆளப்படவேண்டும்.

ஆண்டு என்னும் சொல் இக்கருத்துக்களின் அடிப்படையிலேயே கருக்கொண்டதாம்.

—புத்தாண்டு விழாவில்
."ஆசிரியர்"

லும்போது பிறர் மனதைப் புண்படுத்ததாத கண்ணோட்டம் வேண்டும்; பெரிதும் வேண்டும், கண்டனம் வேண்டாம்; சிறிதும் வேண்டாம், என்ற வேண்டுகோளைத் திரும்பவும் விடுக்கின்றோம்.

இவ்வேண்டுகோளை ஆசிரியர் மறைமலை அடிகளாரின் அருள் வாக்கோடு முடிப்போமாக.

"தமிழ்மக்களில்பெரும்பாலார் ஒருவர் பாலுள்ள குற்றங்களை மற்றவர் எடுத்துப் பேசுபவராய்ப் பகைமையையும் மனவருத்தத்தையும் பரவச்செய்து வருகின்றார்கள். இத்தீய பழக்கத்தை ஒழித்தால் அன்றித்தமிழ் மக்கள் முன்னேற்ற மடைவது சிறிதும் முடியாது ஒருவர்பாலுள்ள குற்றங்களை மறைத்து அவர்பாலுள்ள நலங்களை எடுத்துப் பேசுவதற்கே எல்லாரும் விடாப்பிடியாய்ப் பழகுதல் வேண்டும்."

—தா. சா. மாணிக்கம்.

## மன்பதை(Society)

மனம் தூயதாக அமையுமாயின் வாக்கும் காயமும் தூயனவாக அமைந்துவிடும். வாக்கு, காயம் என்ற இவைகளின் பயன்களாய சொல்லும்செயலும் எண்ணத்தினின்று முகிழ்ப்பனவாகும். எண்ணமோ மனத்தை நிலைக்களமாகக் கொண்டு பிறந்து வளர்வது. எனவேதான் மனம் சிறந்து விளங்குகிறது.

வாயன் (வாயையுடையவன்) காயத்தன் (உடலையுடையவன்) என்று ஆறறிவு படைத்தவனை யாரும் அழைப்பதில்லை. மனத்தன் (மனமுடையவன்), மனிதன் என்றே வழங்கப்படுகிறான். மனிதன் என்னும் சொல் மனத்தின் அடியாய்ப் பிறந்ததாகும். மன் என்னும் வேர் மனத்தைக் குறிப்பதாகும்.

இத்தகைய மனிதன் கூடி வாழும் அமைப்பே "மன்பதை" என்று நம்மனோரால் வழங்கப்படும். ஈண்டு 'மன்' என்பது மனம் என்னும் பொருளையே சுட்டி நிற்கும்.

மன்—மனம்— மனத்தன்— மனிதன்—மன்பதை; மக்கள் கூட்டம் சமூகம் சமுதாயம் என்று அழைக்கப்படும் அமைப்பையே "மன்பதை" என்னும் சொல் குறிக்கும்.

—புத்தாண்டு விழாவில்
"ஆசிரியர்"

# இன்னும் அவர் வந்திலர்.

(தா. சா. மாணிக்கம்.)

தை பிறந்தது. விளைந்தவைகளை அறுத்துக் கொணர்ந்து களஞ்சியத்தில் சேர்த்தாகிவிட்டது. அறுவடை விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. இன்னும் கார்காலம் வரும்வரை அவனுக்கு வேலையில்லை. பொருள் தேட அயலூருக்குச் செல்லலாம் என்று எண்ணினான். ஆனால் அவளைவிட்டுப் பிரிய அவனுடைய நெஞ்சம் துணிந்திலது. பொருளும் பெருத்த அளவில் இருக்கிறது. மேலும் எதற்காகக் கொடிய வழியில் சென்று அல்லலுற்று பொருள் தேட வேண்டும்? அவளைப் பிரிந்து ஏன் வாடவேண்டும்? என்றெல்லாம் அவன் எண்ணினான்.

"எனக்கும் பொருள் இருக்கிறது. இல்லோரின் வறுமையை நீக்குவதற்கும் சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்குவதற்கும் பொருள் வேண்டுமே என்ற குறையும் இல்லை. பின் எதற்காகப்போவது?" என்ற எண்ணங்கள் எழுந்து அவனைப் போவதினின்றும் நிறுத்தியது. தலைவியுடன் இருந்து இன்புறமாறு வேண்டியது; அவனும் இசைந்து தலைவியுடன் இருந்து மகிழ்ந்துவந்தான்.

ஒரு திங்கள் சென்றது. தலைவனும் தலைவியும் வீட்டின் மாடியில் உலவிக் கொண்டிருந்தனர். பறையொலி கேட்டுத் தெருப்பக்கம் சென்று நின்றனர். அணி செய்யப்பட்ட யானையின்மேல் வள்ளுவன் பறையுடன் அமர்ந்திருந்தான் "அயல் நாட்டரசன் இறை செலுத்த மறுத்தான். நம் அரசர் அவன்மேல் போரிடச் செல்கிறார்" என்று முழங்கிப் பறை அறைந்தான். தலைவனுக்கு இது மகிழ்ச்சி தரும் செய்தியாயிற்று. "வேலை வந்தது. உறைவாளுக்கு இரை கிடைக்கப் போகின்றது" என்று அவன் உள்ளம் உரைத்தது. உவகையடைந்தான் பக்கத்திலே களிப்புடன் இருந்த காதலியை நோக்கினான். அவன் நோக்கின நோக்கம் "கண்ணே! மாற்றான் நம் வலியை மதியாது இறை கொடுக்க மறுத்திருக்கிறான். அவன் கொட்டத்தை அடக்கி நம் அரசர் புகழையும் வீரத்தையும் நிலைநாட்டவேண்டும். நான் செல்லும் வண்ணம் பணித்தருள். எதிர்த்தாரை வென்று மீளுவேன். கார்ப்பருவம் தொடங்குமுன் திரும்பி வருவேன். கான மயில்கள் வானத்தைப் பார்த்து ஆடுவதை உன்னுடன் கண்டு மகிழ்வேன். வெள்ளை முல்லையின் சிரிப்பு அழகுடையதா? என் உள்ளத் தரசியின் முத்துப் பற்கள் எழிலுடையனவா? என ஆய்ந்து உணர்ந்து மகிழ்வேன்" என்று கூறிற்று.

அந்த எழிலாள் "செல்லுக காதல! வெற்றி பெறுக கார்காலத்தின் அழகுகளை நான் சுவைக்க தாங்கள் வருக!" என்று கூறுவதுபோல் எதிர்நோக்கம் வழங்கினாள்; புன்னகை பூத்தாள்; போர்க்கோலம் பூணுதற்கு வேண்டியவற்கூறக் கொணர்ந்து கொடுத்தாள்.

அவன் போர்க் கோலம் பூண்டான். மணிகள் ஒலிக்க தேர் வந்து மனையின் முன் நின்றது. வீரன் தேரில் ஏறினான். தேர் பாசறையை நோக்கி எழுந்தது.

* * *

"எங்கே பகையரசன்? எங்கே அவன் வீரர்!" என்று முழக்கம் செய்துகொண்டு பெரும்படை திரண்டது.

போர்க்களத்தில் பகையரசனைக் காணோம். அவன் ஆணையை மேற்கொண்டு எதிர்க்க வரும் சேனையைக் காணோம். துடித்தனர் மறவர். "தலைவ! ஆணையிடுங்கள் சென்று அவனுடைய மதிலை முற்றுகையிடுகிறோம்" என்று கேட்ட வண்ணம் இருந்தனர். "வீரர்காள் பொறுத்திடுவீர்; செய்தி வரும்" என்று அரசன் அவர்களை ஒழுங்குபடுத்திய வண்ணம் இருந்தான்

"அதோ ஒரு குதிரை வேகமாக வருகிறது"

"அதன்மேல் ஏறிவரும் வீரன் வெள்ளைக்கொடி ஏந்தி வருகிறான்."

"பகையரசனுடைய தூதுவன் போலும்"

"இதோ வந்துவிட்டான்"

"அரசனிடம் திருமுகத்தை நீட்டுகிறான்" இப்படிப் பலவாறாகப் பேசிக்கொண்டிருந்தனர் முன்னணி வீரர்.

அரசன் எழுந்து நின்றான் "வீரர்காள்! வலியில்லாமன்னவன் நம்மை எதிர்க்க அஞ்சுகின்றான். இறை கொடுக்கஇசைகின்றானும்; பெற்றுத் திரும்பிவிட வேண்டுமாம். கெஞ்சுகிறான்" ....

அரசனுடைய உரைகளைக் கேட்ட தலைவன் பெரிதும் மகிழ்ந்தான். காதலியைக் கார்காலம் வருமுன் காண்போம். நாம் செய்த உறுதியைக் காப்போம் என்று பலவாறாக எண்ணிக்கொண்டிருக்கும் போது அரசன் திரும்பவும் பேசத் தொடங்கினான் "நண்பர்களே! நம்மை அவமதித்த பகைவனுக்கு நம் வாள்

வலியைக் காட்டி மீளுதலே ஏற்புடைத்து. ஆகவே, மதிலை வளைக்க எழுங்கள்" என்று முழங்கினான் வீரர்கள் எழுந்தனர். தலைவனுடைய உள்ளத்தில் சிறிது கலக்கம் ஏற்பட்டது. "ஐயோ! கார்காலம் வருவதற்கு இன்னும் சிலநாட்கள்தாமே இருக்கின்றன. அந்த மன்னர் கொடுக்கின்ற திறைதனை வாங்கிக்கொண்டு மீளாமல் வலியிழந்த ஒருவன்மேல் போர் தொடுக்க வேண்டும் என்று கட்டளையிடுகின்றாரே!" என்று எண்ணினான். வீர உள்ளம் அவனைப் போரில் ஈடுபடுத்தியது. காதலியை மறந்தான் கார்காலத்தை மறந்தான்; தான் அவளுக்குச் செய்த உறுதியை மறந்தான்; கடமையை நினைவில் கொண்டான். போர் செய்துகொண்டிருந்தான்.

தலைவனைப் பிரிந்த அவள் ஒவ்வொருநாளையும் கணக்கிட்டுக் கொண்டிருந்தாள். சுவற்றில் எழுதிவந்த நாட்குறிப்பு மிகுந்துகொண்டேபோயிற்று. சுவற்றில் எழுதி எழுதி அவள் விரல்கள் தேய்ந்து போயிற்று. கண்கள் ஒளியிழந்தன. கார்ப்பருவம் அவளுடைய வருத்தத்தை மிகுதிப்படுத்த மழையுடன் வந்தது. கொன்றை மரங்கள் பூத்துக் குலுங்கின; அவள் கண்டாள்; கண்களில் கண்ணீர் பெருக நின்றாள் அந்த நிலையில் தோழி அவளைக் கண்டாள். "தோழி! ஏன் இப்படி ஏங்குகிறாய். அந்தக் கொன்றை மரங்கள் அறிவில்லாதவை. பருவ மழை எது? பருவமழை அல்லாதது எது? என்று பகுத்துணரும் பண்புடையவை அல்ல. அவை; அறிவற்றவை; கார்ப் பருவம் இன்னும் வந்திலது. கார்ப்பருவம் வந்தால் தலைவருடைய தேர் வாராதோ? அவருடைய தேர் வாராததிலிருந்தே இது கார்ப்பருவமன்று என நீ தெளிய வேண்டாமா?" என்று கூறித் தேற்றினாள். அவளும் தோழியின் சொற்களை உண்மை என்று நம்பிப் பின்னும் சிலநாட்கள் ஆற்றியிருந்தாள்.

மழை நின்றது. உழவர்கள் உழவுக் கருவிகளை எடுத்துக் கொண்டு நிலத்தை உழுவதற்குச் சென்றனர். அவள் அப்போது அவர்களைப் பார்க்கவில்லை பழங் கொல்லையில் வளர்ந்திருந்த மாங்களை வெட்டினர். வெட்டும் ஒலியையும் அவைகளை அப்புறப் படுத்தும்போது அவர்கள் செய்த ஒலியையும் அவள் கேட்டாள். ஏதோ மரம் வெட்டுகிறார்கள் என்று எண்ணி முதலில் வாளா இருந்துவிட்டாள். ஆனால் காதலர் இருந்தால் அவரும் இவ்வாறு சென்று நம் கொல்லையில் மரங்களை வெட்டிவருவாரே என்ற எண்ணம் எப்படியோ அவள் உள்ளத்தில் எழுந்தது. காதல்நோய் அரும்பிற்று. மாலைக்குள் அந்நோய் பெரிதும் வளர்ந்து மலர்ந்தது. தெருப் பக்கம் பார்த்தபடி நின்றிருந்தாள். விதைகளை எடுத்துச் செல்லும் கூடைகளில் பலர் முல்லைப்பூக்களை ஏந்திச் சென்று கொண்டிருந்தனர். "ஐயோ! கார்காலம்வரவில்லை என்று சொன்னாளே என்தோழி: என்னை ஏமாற்றிவிட்டாளே. மரங்களை எதற்கோ வெட்டுகிறார்கள் என்றல்லவா எண்ணியிருந்தேன். உழுவதற்கும் விதைப்பதற்குமே வெட்டினார்கள் என்பது இப்போதல்லவா புரிகிறது. முல்லைப் பூக்களை வாரி வருகின்றனரே. இது கார்ப்பருவமில்லையா? ஆம். இது கார்ப்பருவந்தான், கார்ப்பருவந்தான்" என்று அலறினாள்.

"கார் வந்துவிட்டதே இன்னும் காதலர் வரவில்லையே. முல்லை மலர் பூக்கும் மாலைவந்து துன்புறுத்துகிறதே. இன்னும் விருந்து உண்ணும் பொருட்டுத் தலைவருடைய மணிகள கட்டிய தேர் வரும் என்னும் செய்தி வரவில்லையே" என்று கூறித் தலைவி ஏங்கினாள்.

மணி ஒலித்தது தலைவனுடைய தேரோ என்று திரும்பிப் பார்த்தாள். காளை ஒன்று அவளை தோக்கி நின்று கொண்டிருந்தது "இல்லை இன்னும் அவர் வந்திலர்" என்று சொல்வதுபோல் தலையை அசைத்தது அதன் கழுத்திலே கட்டியிருந்த மணி மீண்டும் ஒலித்தது.

* * *

இவ்வுணர்வுகளையெல்லாம் விரித்துணர்வதற்குத் துணை செய்வது குறுந்தொகையின் 155-ஆம் பாட்டாகும்.

"முதைப்புனங் கொன்ற
வார்கவி யுழவர்
விதைக்குறு வட்டி
போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந்
தன்றே மெழுகான்
றாதுலைப் பெய்த
பகுவாய்த் தெண்மணி
மரம்பயி லிறும்பி
ஞர்ப்பச் சுரனிழிபு
மாலை நனிவிருந் தயர்மார்
தேர்வரு மென்னும் உரைவா ராதே"

Telegrams: "RAMBROS"

N.Ramu Bros,

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# தழைக்க வாழ்க! "தமிழின்பம்"

(புலவர் முருகவேள், B. O. L.)

(சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராசிரியர், சொல்லின் செல்வர். திரு, ரா. பி. சேதுப்பிள்ளை B. A., B. L. அவர்கள் "தமிழின்பம்" என்னும் நூலுக்காக, இந்திய அரசியலாரால் பரிசளிக்கப் பெற்றதனைப் பாராட்டி, அண்ணாமலை மன்றத்தில் 18-4-55 அன்று நிகழ்ந்த விழாவினை ஒட்டி யாக்கப் பெற்றது.)

1. செந்தமிழ்நற் றிருமொழியில் சிறந்துயர்ந்த பெரும்புலவ!
சேதுப் பிள்ளாய்!
நந்தலிலாச் சென்னைப்பல் கலைக்கழகத் தமிழ்த்தலைவ!
நல்லோய்! நீதான்
அந்தமிலாச் "தமிழின்பம்" அரிதாய்ந்தப் பெயரமைத்தே
அளித்த நூலை
இந்தியநாட் டரசியலார் இனிதுவந்து பரிசளித்தார்!
யாம்ம கிழ்கோம்!

2. ஆங்கிலத்தே பெரும்பட்டம் அடைந்துநின்றும், அருந்தமிழில்
அளவில் ஆர்வம்
ஓங்கிமிகு பெரும்பற்றால் உயர்புலமை உற்றொளிரும்
உரவோய்! சான்றோய்!
ஈங்குநினை என்சொல்லி யாம்புகழ்கேம்? இருபானும்
இந்நூற் றாண்டின்
வீங்குபுகழ்ப் பெரும்புலவர் மேதக்க வரிசையின்நீ
மேவி நின்றாய்!

3. புலமைநலம் என்பவெலாம் பொருந்திநிற்போய்!
தமிழ்ப்பண்பால் பொருவி றந்தோய்!
கலைமைநலம் கனிந்தொழுகக் கருதெதுகை மோனையொடு
கவின்சி றக்கத்
திறமைசெறி அழகியநற் சீர்நடையில் எழுதகிற்போய்!
சொல்லின் செல்வ!
அருமைமிக இனிமையெர்டும் அழகுறநின் போற்பேசற்
கியார்கொல் வல்லார்?

4. சிவநலமும் தமிழ்நலமும் சிறந்தபல கலைநலமும்
செறிந்து நிற்பச்
சுவைநலமே மிகக்கெழுமச் சொற்பொழிவு நிகழ்த்தவல்லோய்!
தோன்றால்! நின்போல்
கவிநலஞ்சேர் சிலம்பினையும் கம்பனையும் மக்களுக்குக்
காட்டி னர்யார்?
மிகநலநின் அணையரன்றே மிகுதமிழ்ப்பற் றின்றெவர்க்கும்
விளையச் செய்தோர்!

# மழையின் விந்தை

கடந்த நான்கு நாட்களாகவே ஓயா ஒழியா மழை. சே! சே! என்ன மழை வேண்டிக்கிடக்கிறது என்ற பேச்சு எங்கும் ஒலித்தது. அதர்மத்தை உலகம் தாங்கும், போற்றும் ஆனால் தர்மத்தைத் தாங்குமா? என்றனர் ஒரு சில போலி வேதாந்திகள். 'பெருவான் மழையே பெய் இனிது வாழி' என்று பாடி மகிழ இது சங்க நூற்காலமல்ல. எல்லோரும் வானத்தை வெறுப்புடன் பார்த்து இழுத்துப் போர்த்திக் கொண்டு சென்றனர். நன்றியில்லா மக்களைப் பார்த்து மின்னலால் நகைத்து உறுமி இடித்துச் சிறிது நேரம் மழை ஓய்ந்தது. 'உச்சி விடல்' என்றனர் பலர். அதை ஆமோதிப்பதுபோல் கடிகாரத்தில் இருமுட்களும் ஒன்றின்மேல் ஒன்று பொருந்தித் தம் ஒற்றுமையை உலகுக்கு அறிவுறுத்தியது. தெருத்திண்ணையில் குழந்தைகளுக்குள் மழையைப்பற்றிப் பெரிய வாக்குவாதம். பூமியில் நீர்நிலைகளிலுள்ள தண்ணீர் ஆவியாகி மேலே சென்று குளிர்ந்து மழையாகப் பெய்கிறது என்ற முடிவுக்கு வந்தனர். ஆம் நல்ல முடிவுதான். ஆனால், மழை அவ்வளவு எளிதில் பெய்வதில்லை. ஒருசில மாலை நேரங்களில் கரிய மேகங்கள் குமுறி மின்னியும் இடித்தும் பொருத்த ஆரவாரம் செய்து பின்னர், மாயமாய் மறைந்துவிடும். நாம் உறுதியாக மழை வரும் எனப்பல அனுபவ ஆதாரங்கள் மூலமாய் அறிந்து எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் போது மேகங்கள் குமுறி பெய்வதுபோல் பாசாங்கு செய்து மறைந்து விடுகின்றனவே. அவை ஏன் அவ்வாறு செய்கின்றன? அவற்றில் உள்ள நீரை நாம் எண்

5. உள்ளமெலாம் கொள்ளைகொண்டு, ஓதுதோறும் இன்பமிக
உறுவிக் கும்நின்
வள்ளுவர்நூல் நயநூலும், வளம்சிறந்த சிலம்பியலும்,
மற்றும் ஏனை
ஒள்ளியபல் சிறுநூலும், உயர்ந்தனின தருநூலாம்
ஊரும் பேரும்
தெள்ளுதமிழ் உரைநடைக்குச் சிறப்பளிக்கும் செல்வமன்றோ?
செப்பல் என்னே!

6. ஊரும்மற் றவற்றினுக்கே உறுபேரும் குறித்தனின
துயர்ந்த நூலில்,
ஆரும்பற் பலவாம்நல் அழகருமை என்சொல்கேம்!
அறிவா ராய்ச்சி,
சேருமுல கனுபவமும், சிர்க்கல்வெட் டுணர்வுமன்றிச்
சிறந்த நம்தே
வாரமுதல் திருமுறைகள் மனம்பதிந்து திளைத்துழைத்த
மாண்பும் காண்கேம்!

7. பெருகுபல நலம்நிறைந்து பிறங்குகந்த புராணநன்னூற்
பெற்றி தேர்ந்து,
அருகலிலா மற்றுதன்பல் லாயிரமாம் கவிதைகளுள்
அருமை ஓங்கி,
உருகியுளம் யகிழ்விக்கும் ஒப்பிலுயர் கவிதைகளை
ஒருபூங் காப்போல்
திருகலிலா வகைநன்றே திரட்டியருள் செம்மால்! நின்
சிறப்பென் சொல்கேம்?

8. எட்டுணையும் தமிழுணர்வே இல்லாத இளைஞர்களும்,
தமிழின் இன்பம்
பெட்டுமிகத் தமைமறந்து பெரிதெதுகை மோனைநலம்
பேணி ஓதி,
மட்டில்பெரு மகிழ்ச்சிகொண்டு வண்ட.மிழிற் போர்வம்
மண்டி நிற்கக்
கட்டுரைகள் பலவரைந்தோய்! கருதுறின்நின் தலைப்புகளே
கவரும் உள்ளம்!

9. கங்கையுயர் வேடனும்நற் காளத்தி வேடனும், இன்
கனியும் காயும்,
மங்கலில்சீர்ப் பாரியும்நன் மாரியும், மா தரும்மலர்ப்பொய்
கையுமே, மற்றும்
செங்கையமர் வேலும்வில்லும், சோறும்நக் கீரனும்போற்
செழுந்தொ டர்கள்
இங்கெவரும் வியப்பமிக இனிதமைத்தோய்! நின்திறமை
என்சொல் கேம்யாம்?

10. விளங்கிளைய பலநலங்கள் மேவநின்றோய்! மேதக்கோய்!
மேன்மை சான்றோய்!
இளம்புலவர் எண்ணிறந்தோர் இஞ்ஞான்று தோன்றிநிற்போர்
எலாக்கும், நீதான

ணியபடி அடைய முடியுமா? இவற்றினை ஆராய வேண்டுவது இன்று மிக மிக முக்கியமான தொன்றாகிவிட்டது. என் தாயும் தம்பியும் விடாப்பிடியாக என் பதிலை எதிர் பார்க்கின்றார்கள். ஆம். இதோ விடைகள்.

ஒவ்வொரு நீர் நிலைகளின் நீர்ப்பரப்பின் மீதும் எப்போதும் சில நீராவித்துணுக்குகள் இருக்கின்றன. சில சமயங்களில் அவை கீழே உள்ள நீரிலேயே விழுந்து நீராக மாறிவிடுகின்றன. அதே சமயத்தில் கீழிருந்து மீண்டும் நீர் ஆவியாக மாறி மேலே செல்லுகிறது. மேலிருந்து கீழே வரும் நீராவியின் அளவும் மேலே செல்லும் நீராவியின் அளவும் ஒரே சமநிலையி லிருந்தால், அப்போது, நீர்ப்பரப்பின் மீதுள்ள ஆவி தெவிட்டிய நிலையில் **(Saturated)** உள்ளது எனவும் கீழுள்ள நீரோடு சமநிலையில் **(Equilibrium)** உள்ளது எனவும் கூறுகின்றோம். கீழுள்ள நீரை வெப்பமடையச் செய்தால் அதிகமாக நீராவி உண்டாகித் தெவிட்டிய நீராவியின் அழுத்தமும் அதிகரிக்கும். அப்போதுதான் கீழேயுள்ள நீரும் மேலே உள்ள ஆவியும் மீண்டும் சமநிலையை அடையும்.

நீராவித்துளிகள் குளிர்ந்தகாற்றில் குறைவு. வெப்பமான காற்றில் அதிகம். குளிர்ந்த காற்று கடலின்மீது செல்லும்போது கீழேயிருந்து வந்து அதில் கலக்கும் நீர்த்துளிகள் அதிகம். அதிலிருந்து கீழேவந்து கலக்கும் நீர்த்துளிகள் குறைவு. எனவேதான் அக்காற்றின் ஈரம் அதிகரிக்கின்றது. அதற்கு மாறுபாடாக வெப்பக்காற்று கீழிருந்து குளிரும்படிச் செய்யப்பட்டால் தன்னிடமிருக்கும் ஆவியில் சிறிது பங்கை நீராக்கி இழந்து

வளங்குலவு புதியதமிழ் வழிமரபின் முதல்வனென
வயங்கு கின்றாய்!
உளங்கொளகின் உயர்புகழ்யாம் உரைத்தலென்னே? உயர் அறிஞ!
ஊழி வாழி!

11\. அருங்குணங்கள் பலநிறைந்த அண்ணல்! செந் தமிழின்பம்
ஆரத் துய்த்தோய்!
திருத்தமிகத் தமிழ்த்தொண்டு செய்துநன்றே தமிழின்பம்
செழிக்கச் செய்தோய்!
பொருந்துறநீ பெறுபரிசில் புகழ்த்தமிழர் பெறுபரிசாம்!
பொங்கும் இன்பம்
தரும்பலநற் றமிழ்நூல்கள் தகஇயற்றித் "தமிழின்பம்"
தழைக்க வாழ்க!

---

விடுகிறது. பனி இப்படித்தான் உண்டாகிறது. சூரியன் மறைந்த பிறகு பூமி விரைந்து குளிர்ந்து விடுவதால், இரவில் வெப்பக்காற்றில் உள்ள நீராவி பனித் துளிகளாகக் கீழே படிகிறது.

அதிக நீராவி காற்றோட்டைகளால் மேலே எடுத்துச் செல்லப்படுகிறது. காற்று மேலே செல்லும்போது விரிவடைகிறது. ஆதலால் குளிர்ச்சி யடைந்து, அதில் உள்ள நீராவியினை மிகத் தெவிட்டிய நிலைக்கு மாற்றுகிறது. அதில் அதிகமாக உள்ள நீராவி நீராகமாறிக் குறைக்கிறது. இதற்கு வானத்திலேயே ஒரு நிலப்பரப்பு வேண்டும். அதனைக் காற்றிலுள்ள நீர்த்துளிகள் தாமாகவே உண்டாக்கிக் கொள்ளுகின்றன. அப்போதுதான் அதன் மீதுள்ள நீராவி திரவமாகி விழும். இந்த நீர்ப்பரப்பும் மேலே உள்ள நீராவியும் ஒரே உஷ்ண நிலையில் இருக்கும். அப்படி இருக்க வேண்டியது மிக்க அவசியம் தான். மேகத்தில் உள்ள ஒரு நீர்த்துளியில் பலகோடிக்கணக்கான நீர்த்துணுக்குகள் இருக்கின்றன. அவையெல்லாம் ஒரு துளியாகச் சேருவதற்கு மிகக் குறைந்த நேரத்தில் மிக்க விரைவாக வந்து மோதுதல் வேண்டும். இதற்கு நீராவி மிக அதிக தெவிட்டியநிலையில் இருக்க வேண்டும். அந்நிலையில்தான் புதிதாக உண்டான நீர்த்துளிகள் சமநிலையில் இருக்க முடியும். ஆனால், காற்றிலோ வென்றால் நீராவி சிறிது தெவிட்டிய நிலையிலேதான் இருக்கிறது. அது நீர்த்துளியாகமாறிச் சமநிலையிலிருக்க வேண்டுமாயின் அதற்கு உதவியாகக் காற்றில் ஏதேனும் பற்றுக் கோடுகள் இருக்கவேண்டுவ தவசியம். அப்போதுதான் அவற்றைச் சுற்றி நீர்த்துணுக்குகள் சேர்ந்து துளியாகமாறும். காற்றில் உள்ள பற்றுக்கோடுகள் நான்குவகைப்படும். 1 கடல் நீர் ஆவியாக மாறுகையில் மேலே தெறித்துச் செல்லும் உப்புத் துணுக்குகள். (2) மின்னலினால் உண்டாகும் அக்கித் திராவகத் (Nitric acid) துணுக்குகள் (3) புகையாக மேலே கிளம்பும் துணுக்குகள் (4) தூசி. இவற்றுள் தூசி-நீர்த்துணுக்குகளை அதிகமாக இழுப்பதில்லை. இந்நான்கு வகைத் துணுக்குகளும் காற்றில் இருப்பதால் நீராவி சிறிதே தெவிட்டிய நிலையில் இருந்தாலும், இவற்றைச் சுற்றி நீர்த்துளிகள் அதிவிரைவில் உண்டாகின்றன.

(வரும்)

'மூர்த்தி'

---

கண்டிக்கத் தெரியாதவனுக்குக் கருணை காட்டவும் தெரியாது.

—கார்லைல்.

ஒருவன் எப்பொழுதும் வீரனாகவே வாழமுடியாது. ஆனால் என்றென்றும் மனிதனாக வாழ முடியும்.

—கதே.

சென்றுபோன நாட்களைப் பற்றி வருந்தாதே. எதிர்காலத்தை நினைத்து அஞ்சாது இன்று செய்யும் காரியத்தில் முனைந்திரு.

—மார்க்க அவ்ரோலியன்.

ஒருவன் பிறாது இலட்சியத்திற்காக இறக்கமுடியும். ஆனால் அவன் வாழ்வதானால் தனது இலட்சியத்திற்காகவே வாழ வேண்டும்.

—இப்சன்

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்
ELEPHANT KISAN
பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)